தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பொது முயற்சிகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை பொது முயற்சிகள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

3.1.1 வருமான மதிப்பீடு தயாரித்தலில் நலிவுகள்

2015 யூன் 22 ஆந் திகதிய இலக்கம் 01/2015 என்ற அரச நிதிக் கொள்கை சுற்றிக்கையின் 03 ஆம் பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 142 இன் பிரகாரம் வருமான எதிர்வு கூறல் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படாது இருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**வருமானக் குறியீட்டு இலக்கம் 20:02:03:00 - இலாபம்**		
(i)	2024 ஆம் ஆண்டுக்கான இலாப வருமானக் குறியீடு 20.02.03.00 இற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 64,192,000,000 ஆக	ஏற்றுக் கொள்கின்றோம்.	வருமானத்தை சேகரிப்பதற்கு காணப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பாக மிகவும் சரியாக எதிர்வு கூறி

	இருந்ததுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 33,190,901,922 ஆனதன் காரணமாக அதன் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 51 சதவீதத்தை மாத்திரம் கொண்டிருந்தது.		மிகவும் சரியான பொருத்தமான மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் போது 18 பொது முயற்சிகளின் மூலம் ரூபா 16,518 மில்லியன் வருமானம் அறவிடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் போது அந்த நிறுவனத்தின் மூலம் எந்த ஒரு வருமானமும் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது 11 பொது முயற்சிகளுக்கு உரிய இலாப வருமான மதிப்பீடு செய்யப்படாது இருந்த போதும் அந்த முயற்சிகளில் இருந்து ரூபா 2,952.5 மில்லியன் இலாப வருமானம் கிடைத்திருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	மேற்படி
(iii)	இலாப வருமானக் குறியீட்டு இலக்கம் 20.02.03.00 இற்கு உரிய 08 பொது முயற்சிகளின் வருமான மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது உள்ளபடியான வருமானத்தின் குறைவு 13 சதவீதத்திற்கும் 94 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது 10 பொது முயற்சிகளில் இருந்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்த இலாப வருமானத்தின் அதிகரிப்பு 46 சதவீதம் முதல் 1,900 சதவீதம் வரையிலான வீச்சில் இலாப அளவினால் வருமானத்திற்கு பங்களித்திருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	சரியான கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுப்பதற்காகவும், பாதீடு இடைவெளியில் எந்த அளவு உள்ளது என்பதை தீர்மானிப்பதற்காகவும், மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வுகளுக்காகவும் வருமானத்தை எதிர்வு கூறல் மற்றும் வருமானத்தை சேகரித்தல் அறிக்கை வைத்தல் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	**வருமானக் குறியீட்டு இலக்கம் 20:02:04:00 - இலாபப் பங்கு வருமானம்**		
(i)	2024 ஆம் ஆண்டில் வருமானக் குறியீட்டு இலக்கம் 20.02.04.00 - இலாபப் பங்கு வருமானத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 5,341,000,000 ஆக இருந்ததுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 7.889,520,000 ஆனதன் காரணமாக அது மதிப்பீடு	ஏற்றுக் கொள்கின்றோம்.	சரியான கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுப்பதற்காகவும், பாதீடு இடைவெளியில் எந்த அளவு உள்ளது என்பதை தீர்மானிப்பதற்காகவும், மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கைப்

	செய்யப்பட்ட வருமானத்தை விஞ்சி ரூபா 2,548,520,000 சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட 48 சதவீத அதிகரிப்பாகும்.		பகுப்பாய்வுகளுக்காகவும் வருமானத்தை எதிர்வு கூறல் மற்றும் வருமானத்தை சேகரித்தல் அறிக்கை வைத்தல் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ii)	16 பொது முயற்சிகளில் இருந்து ரூபா 1,140 மில்லியன் இலாபப் பங்கு வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனங்களில் இருந்து மீளாய்வாண்டின் போது இலாபப் பங்கு வருமானத்தில் எந்த ஒரு பங்களிப்பும் வழங்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே 2024 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட இலாபப் பங்கு வருமானத்தில் உள்ளடக்கப்படாது இருந்த 06 பொது முயற்சிகளில் மீளாய்வாண்டின் போது இலாபப் பங்கு வருமானத்திற்கு ரூபா 3,368 மில்லியனால் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	மேற்படி
(iii)	07 பொது முயற்சிகளின் இலாபப் பங்கு வருமானத்தை மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது உள்ளபடியான வருமானத்தின் குறைவு 03 சதவீதத்திற்கும் 92 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. மேலும் 10 பொது முயற்சிகளில் இருந்து பெற்றக் கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட இலாபப் பங்கு வருமானத்தை விஞ்சி 24 சதவீதம் முதல் 900 சதவீதம் வரையிலான வீச்சிலான அளவில் இலாபப் பங்கு வருமானத்திற்கு பங்களிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	மேற்படி
(இ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 5.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டதாக	ஏற்றுக் கொள்கின்றோம்.	பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 5.3 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சான்றுபடுத்தப்பட்ட அரச கம்பனிகளில் வரிக்குப் பின் இலாபத்தில் ஆகக் குறைந்தது 30 சதவீதம் ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 11 கம்பனிகளுக்கு உரிய 2023 ஆம் ஆண்டின் இலாபப் பங்குகளில் கூட்டுமொத்தமாக ரூபா 13,010 மில்லியன் ஆன இலாபப் பங்கு வருமானம் சேர்க்கப்பட்டிருக்க வில்லை.		

3.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஆரம்ப செலவின மதிப்பீட்டை திருத்தப்பட்ட செலவின மதிப்பீடுகளுடன் ஒப்பீடு செய்த போது 12 செலவின விடயங்களுக்கு உரிய முரண்கள் 83 சதவீதம் குறைவடைந்ததில் இருந்து 100 சதவீதம் அதிகரிப்பு வரையிலான வீச்சில் வேறுபாடுகள் காணப்பட்டது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இயலுமான வரை சரியாக மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் போது 15 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 02 மூலதன செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டதன் காரணமாக அந்த நிதியேற்பாட்டில் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட பின்னர் ரூபா 272,470,396,376 சேமிப்பு காணப்பட்டதுடன் அந்த சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டில் 06 சதவீதம் முதல் 79 சதவீதத்திற்கு இடையிலான வீச்சிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	மேற்படி
(இ)	2024 சனவரி 10 ஆந் திகதிய இலக்கம் 01/2024 என்ற தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் சிக்கனமானதாக அரசாங்க செலவினங்களைச் செய்வதற்கும் செலவினங்களைக் குறைப்பதற்கான பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளை கவனத்துடன் பின்பற்றுவதன் மூலம் செலவினக் கட்டுப்பாட்டிற்கான வழிகள் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டதுடன் ஒதுக்கப்பட்ட	ஏற்றுக் கொள்கின்றோம்.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நிதியேற்பாட்டு எல்லையில் மாத்திரம் செலவினங்களைச் செய்வதற்காக கடப்பாடு ஏற்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் செலவின தலைப்பு 1508 (ஏனைய) இற்காக 2024 திசெம்பர் 11 ஆந் திகதி குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 130,000,000,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடு முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் ரூபா 8,081,294,498 அதாவது திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 06 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.		
(ஈ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் 02 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடு மாற்றல்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முழமையாக பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இயலுமான வரை சரியாக மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.

3.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கு உட்படல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 03 வாகனங்களுக்காக 2024 திசெம்பர் மாதத்திற்காக செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட வாடகையின் கூட்டுமொத்தம் ரூபா 969,291 தொகை 2024 ஆம் ஆண்டின் பொறுப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்படாது இருந்ததுடன் 2025 சனவரி மாதத்தின் போது தீர்க்கப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம். தவறு ஒன்றினால் இந்த தொகை பொருட்கள் பதிவேட்டில் உள்ளடக்ககப்படாது இருந்ததுடன் இதன் பின்னர் இவ்வாறான தவறுகளை தடுத்துக் கொள்வதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 பொது வைப்புகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 யூலை மற்றும் செப்தெம்பர் மாதங்களில் பொது வைப்பு பதிவேட்டில் பெறுவனவுகளில் மொத்த கூட்டுத் தொகை முறையே ரூபா 2,600 மற்றும் ரூபா	ஏற்றுக் கொள்கின்றோம்.	கணக்கீடு செய்யும் போது சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளல்

	3,782,024 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் உரிய திறைசேரி அச்சிடல்களில் அது முறையே ரூபா 3,200 மற்றும் ரூபா 2,519,216 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தது.		வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்திற்கு இணங்க பொது முயற்சிகளின் செயலாற்றலை அதிகரித்துக் கொள்வதற்காக முகாமைத்துவத்திற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல், அவற்றின் வளங்களின் பயன்பாட்டை செயற்திறன் மற்றும் சிக்கனத் தன்மையினையும் உறுதிப்படுத்தும் நோக்கிலான செயற்பாடுகள் அந்த நிறுவனங்களின் நல்லாளுகையை அதிகரித்தலும் பொது முயற்சித் திணைக்களத்தின் அடிப்படைப் பணிப் பொறுப்பாக இருந்த போதிலும் அந்த பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு திணைக்களத்தால் நியாயமான பங்களிப்பு காணப்படாது இருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திறைசேரியினால் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 பொது முயற்சிகளுக்காக அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மூலதனப் பங்களிப்பாக கூட்டுமொத்தமாக ரூபா 218,245 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அந்த முதலீட்டின் பெறுமதி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 204,367 மில்லியன ஆக இருந்ததுடன் ஒவ்வொரு நிறுவனங்களிலும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் மொத்த தேறிய சொத்துக்கள் (மொத்த சொத்துக்கள் - மொத்த வெளிப் பொறுப்புக்கள்) பெறுமதி மறை ரூபா 412,450 மில்லியன் ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களை நிதிச் சொத்துக்களின் கீழ் மூலதனப் பங்களிப்பு சொத்து ஒன்றாகக் காண்பிக்கப்பட்ட போதும் அப் பெறுமதி முன்னர் இழப்பீட்டுக்கு (impairment) உள்ளாகி, உரிய நிறுவனம் முழுமையாக வெளிப் பொறுப்புக்களின் கீழ் பேணிச் செல்லப்படுகின்ற நிலைமைக்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	நட்டம் பெறுகின்ற தொழில் முயற்சிகளின் நட்டங்களைக் குறைத்துக் கொள்வதற்காகவும், இலாபம் பெறுகின்ற நிலைக்கு கொண்டு வருவதற்காகவும் பொது முயற்சிகளைத் திட்டங்கள் தயாரித்து அமுல்படுத்துமாறு பொது முயற்சிகள் திணைக்களத்தால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	உரிமைத் தன்மையுள்ள நிறுவனங்களில் நிதி நிலைமைகளை கால ரீதியில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அவற்றின் முதலீட்டுப் பெறுமதியில் குறைவடைந்தமை நிதிக்கூற்றுக்களில் உரிய பிரகாரம் வெளிப்படுத்துவதற்கு உரிய திணைக்களத்துடன் தொடர்பு படுத்துதல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் ஆரம்ப மற்றும் இறுதித் திகதியில் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 1,935,429 மில்லியன தொகை அரசாங்கத்தின் மூலதனப் பெறுமதியுடன் 05 பொது முயற்சிகளில் 2023 திசெம்பர்	நட்டம் பெறுகின்ற தொழில் முயற்சிகளின் நட்டங்களைக் குறைத்துக் கொள்வதற்காகவும், இலாபம் பெறுகின்ற நிலைக்கு	மேற்படி

	31 இல் உள்ளவாறான தேறிய சொத்துக்களின் கூட்டுமொத்தம் ரூபா 550,774 மில்லியன் மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் அந்த பொது முயற்சிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் கவனத்தில் கொள்ளக் கூடிய வகையில் இழப்பீட்டிற்கு (impairment) உட்பட்டுக் காணப்படுகின்றமை அதானிக்கப்பட்டது.	கொண்டு வருவதற்காகவும் பொது முயற்சிகளைத் திட்டங்கள் தயாரித்து அமுல்படுத்துமாறு பொது முயற்சிகள் திணைக்களத்தால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	
(இ)	தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான 04 கூட்டுத்தாபனங்களில் 2022 ஆம் ஆண்டுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 291 மில்லியன் நட்டம் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 3,199 மில்லியன் நட்டம் அறிக்கையிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	பல்வேறு அரச கொள்கை விடயங்களில் விலைக் கொள்கை அமுல்படுத்துதல், தனியார் துறை மற்றும் போட்டியிடுவதற்கு தேவையான கட்டமைப்பை மாற்றுவதற்கு தேவையான அரச நிதியீட்டம் போதியளவில் காணப்படாமையில் நிதிச் சந்தையில் பெறப்பட்ட கடன்களுக்காக செலுத்துவதற்கு ஏற்படுகின்ற அதிக நிதிக்கிரயம் போன்ற காரணங்களினால் ஒட்டுமொத்தமாக இலாபம் அறிக்கையிடப்பட்டிருந்த போதும் பொது முயற்சிகள் திணைக்களத்தால் பொது முயற்சிகளுக்கு வழங்கப்படுகின்ற ஆலோசனை ரீதியான உதவியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு மேம்படுத்தல்களில் மாற்றங்களின் மூலம் இலாபத் தன்மை கொண்டு வருவதற்கு பொது முயற்சிகளில் இருந்து எதிர்காலத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	நட்டம் பெறுகின்ற பொது முயற்சிகளின் இலாபம் பெறும் நிலைக்கு கொண்டு வருவதற்காக மேற்பார்வை நடவடிக்கைகளின் போது விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.
(ஈ)	தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் போது நட்டம் அறிக்கையிடப்பட்ட இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 2023 ஆம் ஆண்டின் போதும் நட்டம் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன்	மேற்படி	மேற்படி

	அதனிடையே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் நட்டம் முறையே 358 சதவீதம் மற்றும் 161 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்தது.		
(உ)	தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 133 மில்லியன் தேறிய இலாபம் அறிக்கையிட்டு இருந்த தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 168 மில்லியன் தேறிய நட்டமும், 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 05 மில்லியன் தேறிய நட்டமும் அறிக்கையிடப்பட்டு மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 156 மில்லியன் தேறிய நட்டத்தையும் அறிக்கையிட்டிருந்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது அந்த நட்டம் 2,799 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.	மேற்படி	மேற்படி
(ஊ)	2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 08 பொது முயற்சிகளுக்குரிய நடைமுறை விகிதம் நலிவான நிலையில் காணப்பட்டது. விசேடமாக சிறிலங்கன் விமான கம்பனியினதும், இலங்கை பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தினதும் நடைமுறை விகிதம் முறையே 0.15 மற்றும் 0.17 ஆன மிகவும் குறைந்த பெறுமதியில் காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த பொது முயற்சிகளின் திரவத் தன்மை நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் ஆகக் கூடிய ஆபத்துக் காணப்படுகின்றமை மேலும் அவதானிக்கப்பட்டது.	இதற்காக ஒவ்வொரு பொது முயற்சிகளுக்கும் உரிய காரணங்கள் காண்பிக்கப்பட்டுள்ளது.	உரிய முயற்சிகளின் மேற்பார்வை நடவடிக்கைகளின் போது திரவத் தன்மை நெருக்கடியை மாற்றியமைப்பதற்கு தேவையான ஆலோசனை வழங்குதல் வேண்டும்.
(எ)	2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 16 பொது முயற்சிகள் தொடர்பாக மிகை மூலதன புரள்வு நிலைமை ஒன்று அவதானிக்கப்பட்டது. மேலும் மொத்த உரிமைத் தன்மை மறைப் பெறுமதியைக் கொண்டுள்ள பொது முயற்சிகளும் அவதானிக்கப்பட்டதுடன் அந்த நிறுவனங்கள் முழுமையாக நீண்ட காலக் கடன் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த சகல நிறுவனங்களும் உயர்ந்த ஆகக் கூடிய நிதி அபாயத்திற்கு (Financial Risk) தொடர்ச்சியாகக்	இதற்காக ஒவ்வொரு பொது முயற்சிகளுக்கும் உரிய காரணங்கள் காண்பிக்கப்பட்டுள்ளது.	உரிய தொழில் முயற்சிகளின் மேற்பார்வை நடவடிக்கைகளின் போது புரள்வு நிலையை உச்ச அளவில் பேணிச் செல்வதற்கான தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

	காணப்பட்டமை தொடர்பாகவும் அதிக ஆபத்து முகங்கொடுக்கப்பட்டிருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது.		
(ஏ)	21 பொது முயற்சிகளுக்குரியதாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நேர் மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் மூலதனப் பங்களிப்பு மற்றும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட அரசாங்த்தின் நிதிப் பங்களிப்புக்கு இடையே ரூபா 25,898 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	ஏற்றுக்கொள்கின்றோம்.	அரச உரிமைத் தன்மையில் உள்ள நிறுவனங்களுடன் கால ரீதியான மீதிகளை உறுப்படுத்தலைப் பெற்று மதிப்பீட்டுக்கு உட்படுத்தி சரியான நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் கணக்குகளில் சரியான தன்மை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நேர் மீதி உறுதிப்படுத்தல் மற்றும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களுக்கு இடையே 05 நிறுவனங்களுக்கு உரிய அரசாங்கத்திற்குரிய பங்கு எண்ணிக்கையில் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் அத்திகதியில் அரசாங்கத்தின் மூலதனப் பங்களிப்பு ரூபா 476,986 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம்.	மேற்படி
(ஒ)	Sri Lanka Institute of Biotechnology (Pvt) Ltd நிறுவனத்தில் இருந்து கிடைத்த நேர் மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பங்கு ஒன்றின் விலை ரூபா 10 ஆன 52,472,574 பங்ககள் பொதுத் திறைசேரிக்குச் சொந்தமாக இருந்தமை குறிப்பட்படப்டருந்ததுடன், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த மூலதன பங்களிப்பு ரூபா 525 மில்லியன் ஆகும். எனினும் 2024 திசெம்பர் 31 இல்	ஏற்றுக் கொள்கின்றோம்.	மேற்படி

	உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இந்த பெறுமதிக்கு மேலதிகமாக ரூபா 772 மில்லியன் மூலதனப் பங்களிப்பு மீதி ஒன்று காணப்பட்டது.		
(ஓ)	08 பொது முயற்சிகளுக்குரிய 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மூலதனப் பங்களிப்பு ரூபா 1,150,312 மில்லியன் ஆக இருந்ததுடன் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 1,167,570 மில்லியன் ஆனதன் காரணமாக அதனிடையே ரூபா 17,258 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	ஏற்றுக் கொள்கின்றோம்.	மேற்படி
(ஔ)	06 அரச கம்பனிகளுக்கு உரிய உரிமைத் தன்மையில் உள்ள பங்குகளின் எண்ணிக்கை மற்றும் அதில் விநியோகிக்கப்பட்ட பெறுமதிகளின் பிரகாரம் கணிப்பீடு செய்யும் போது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி ரூபா 6,549 மில்லியன் ஆக இருந்த போதிலும் அது அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 15,893 மில்லியன் ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் மூலதனப் பங்களிப்பு ரூபா 9,344 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	இந்த வேறுபாடுகளுக்கு தாக்கமளித்த காரணங்கள் தொடர்ந்தும் கண்டறியப்பட்டு தேவையான சரி செய்தல்கள் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(க)	09 பொது முயற்சிகளுக்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட நேர் மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் மற்றும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அந்த பொது முயற்சிகளுக்குரிய திறைசேரிக்கு உரிய பங்கு உரிமைத் தன்மையில் சதவீதத்தில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது.	எதிர்காலத்தில் அது தொடர்பாகவும் மேலும் கவனம் செலுத்தி உரிய கம்பனிகளின் ஒத்துழைப்பையும் பெற்று பங்குகளின் எண்ணிக்கையின் சதவீதத்தை சரியாக உறுதிப்படுத்தியதன் பின்னர் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அரசாங்கத்தின் உரிமைத் தன்மையில் உள்ள நிறுவனங்களுடன் கால ரீதியில் மீதி உறுதிப்படுத்தல்களை பெற்று கணக்குகளில் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(கா)	‘‘மக்கள் அபிலாசைகளை பாதுகாத்தல்’’ என்ற பிரதான பணியின் கீழ் பொது முயற்சிகள் திணைக்கதளின் மேற்பார்வையின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் வருடாந்த அறிக்கை குறித்துரைத்த திகதிகளில் பாரகளுமன்றத்தில் சமர்ப்பித்தல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் செய்தல் திணைக்களத்தின் பணியாகும். கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற 305 நிறுவனங்கள் காணப்பட்ட போதிலும் திணைக்களத்திற்கு முக்கியமானதாகக் கருதப்பட்ட 52 நிறுவனங்களுடைய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு உரிய தகவல்கள் மாத்திரமே திணைக்களத்தின் இணையதளத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான மேலதிக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.		
(i)	2021 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுகத்தப்பட்ட Operational Manual for State Owned Enterprises வழிகாட்டிக் கோவையின் 6.6 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நிதியாண்டுக்கு உரிய வருடாந்த அறிக்கை ஆண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் கணக்காய்வு அறிக்கையுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2025 மே 21 ஆந் திகதி வரையிலும் 2023 ஆம் ஆண்டிற்கான அந்த 52 பொது முயற்சிகளும் பாராளுமன்ற உத்தியோகபூர்வ இணையதளத்தில் உள்ளடக்கப்பட்ட 05 நிறுவனங்களுக்குரிய வருடாந்த அறிக்கை மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டிற்காக 2025 மே 30 ஆம் திகதி வரை எந்த ஒரு நிறுவனத்திற்கும் உரிய வருடாந்த அறிக்கையும் பாராளுமன்ற உத்தியோகபூர்வ இணையதளத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் தொடர்பாக இந்த ஆண்டின் ஆரம்பத்தின் போது உரிய நிறுவனங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், நிறுவனத் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு உரிய நிறுவனத்திற்கு அவ்வப்போது அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.	மேற்பார்வைக்கு உட்படுகின்ற சகல நிறுவனங்கள் தொடர்பாகவும் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் மற்றும் தகவல்கள் பின் ஆய்வு செய்யப்படல் வேண்டும்.

(ii)	2021 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான முயற்சிகளுக்காக நிறுவனம் சார் கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் மதிப்பீட்டு கூட்டத்தின் போது வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அது தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	இது தொடர்பாக உரிய நிறுவனம்சார் அறிவித்தல்கள் தொடர்ச்சியாக இந்த நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் வருடாந்த செயலாற்றல் மதிப்பீட்டுக் கூட்டத்தினை நடாத்துதல் தொடர்பாக உரிய நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு பொறுப்பு உள்ளது.	நிறுவனம்சார் கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.